**இனிமையான குழந்தைகளே, ஞானக்கடல் தந்தை உங்களுக்கு இரத்தினங்களை தட்டுகளில் நிரப்பிக் கொடுக்கிறார். எவ்வளவு வேண்டுமோ உங்கள் பையை நிரப்பிக் கொள்ளுங்கள். அனைத்துக் கவலைகளிலிருந்தும் விடுபட்டு விடுங்கள்.**

கேள்வி:
**ஞான மார்க்கத்தின் எந்த ஒரு விசயத்தை பக்தி மார்க்கத்தில் விரும்புகின்றனர்?**

பதில்:
**தூய்மை. ஞான மார்க்கத்தில் குழந்தைகளாகிய நீங்கள் தூய்மை ஆகிறீர்கள். தந்தை உங்களது அழுக்கான ஆடைகளைத் தூய்மையாக்க வந்துள்ளார். ஆத்மா எப்போது தூய்மை ஆகிறதோ, அப்போது தான் வீட்டுக்குச் செல்வதற்கான, பறப்பதற்கான சிறகு முளைக்கிறது. பக்தியிலும் தூய்மையை மிகவும் விரும்புகின்றனர். தூய்மையாவதற்காக கங்கையில் சென்று குளிக்கின்றனர். ஆனால் நீரின் மூலம் ஆத்மா தூய்மையாக ஆக முடியாது.**

ஓம் சாந்தி.
இனிமையிலும் இனிமையான குழந்தைகளே, நீங்கள் நினைவு யாத்திரையை மறக்கக் கூடாது. காலையில் யோக பயிற்சி (நினைவு யாத்திரை) செய்கிறீர்கள், அதில் பேச்சு இருப்பதில்லை. ஏனெனில் அது நிர்வாணதாமம் செல்வதற்கான யுக்தி ஆகும். தூய்மையாகாமல் குழந்தைகளாகிய நீங்கள் அங்கு செல்ல முடியாது, பறக்க முடியாது. சத்யுகம் ஏற்படும்போது நிறைய ஆத்மாக்கள் மேலே பறந்து சென்று விடுகிறார்கள் என்று நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள். இப்போது எவ்வளவு கோடிக்கணக்கான ஆத்மாக்கள் இருக்கின்றனர்! அங்கே சத்யுகத்தில் சில இலட்சம் பேர் தான் மிஞ்சி இருப்பார்கள். மற்ற அனைவரும் பறந்து சென்று விடுகின்றனர். கண்டிப்பாக யாரோ வந்து சிறகு கொடுத்திருக்கிறார் அல்லவா! இந்த நினைவு யாத்திரையின் மூலம் தான் ஆத்மா தூய்மை ஆகிறது. தூய்மை ஆவதற்காக இதைத் தவிர வேறு வழி இல்லை. பதீத பாவனர் என்று ஒரு தந்தைக்கு தான் சொல்கிறார்கள். அவரைத் தான் சிலர் ஈஸ்வரன் என்றும், சிலர் பரமாத்மா என்றும், சிலர் பகவான் என்றும் சொல்கின்றனர். அவர் ஒருவர் தானே தவிர பலர் அல்ல. அனைவருடைய தந்தையும் ஒருவர் தான். லௌகீகத் தந்தை ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இருக்கிறார். மற்றபடி பரலௌகீக தந்தை அனைவருக்கும் ஒருவர் தான். அந்த ஒருவர் வரும்போது அனைவருக்கும் சுகத்தை கொடுத்துவிட்டுச் செல்கிறார். பிறகு சுகத்தில் அவரை நினைவு செய்வதற்கான அவசியம் இல்லை. அதுவும் கடந்து போய்விட்டதல்லவா! இப்போது தந்தை கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தின் இரகசியத்தை அமர்ந்து புரிய வைக்கிறார். மரத்தின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் மிக சுலபமானது. விதையிலிருந்து எப்படி மரம் வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். பிறகு விருத்தி அடைந்து அடைந்து கடைசியில் முடிவு வந்துவிடுகிறது. இதைத் தான் ஆதி மத்திய அந்திமம் என்று சொல்லப்படுகிறது. இது பலதரப்பட்ட தர்மங்களின் மரம், பலதரப்பட்ட அம்சங்கள் நிறைந்த மரமாகும். ஒவ்வொரு தர்மத்தின் அம்சங்களும் தனித்தனிப்பட்டதாகும். பூக்களைப் பார்த்தீர்கள் என்றால் எப்படிப்பட்ட மரமோ அதற்கேற்றார் போல பூக்கள் வெளிப்படுகின்றன. அந்த அனைத்து பூக்களின் அம்சங்களும் ஒரேமாதிரி இருக்கும். ஆனால் இந்த மனித சிருஷ்டி மரம் பலதரப்பட்டதாக இருக்கிறது. அங்கே ஒவ்வொரு மரத்தின் அழகும் தனிப்பட்டது. இந்த மரத்தில் பலவிதமான அழகு உள்ளது. பாபா ஷ்யாம் சுந்தர் என்று புரிய வைக்கிறார், இது தேவி தேவதா தர்மத்தினுடையதாகும். எப்போது அவர்கள் சதோபிரதானத்திலிருந்து தமோபிரதானமாக ஆகிறார்களோ, அப்போது அழகானவரிலிருந்து (சுந்தர்) கருப்பானவராக (ஷ்யாம்) ஆகிறார்கள். இதுபோல ஷ்யாம் சுந்தர் வேறு எந்த தர்மத்திலும் ஆவதில்லை. ஏனெனில் கருப்பாகவே (தூய்மையற்றதாகவே) இருக்கக்கூடிய தர்மங்களும் இருக்கின்றன. அவர்களுடைய அம்சங்களையும் பாருங்கள். ஜப்பானியரின் தோற்றம், ஐரோப்பியருடைய தோற்றம், சீனருடைய தோற்றத்தைப் பாருங்கள். இந்தியர்களின் தோற்றங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அவர்களுக்காகத் தான் ஷ்யாம் சுந்தர் என்று பாடப்பட்டுள்ளது. வேறெந்த தர்மத்துக்கும் அப்படி பாடப்படவில்லை. இது மனித சிருஷ்டி மரமாகும். பலதரப்பட்ட தர்மங்கள் உள்ளன. வரிசைக்கிரமமாக அவர்கள் எப்படி வருகின்றனர் என்ற ஞானம் குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது கிடைக்கிறது. வேறு யாரும் இந்த விசயத்தைப் புரிய வைக்க முடியாது. இந்த கல்பம் 5000 வருடங்களுடையதாகும். இதை விருட்சம் என்று சொல்லலாம்,

அல்லது உலகம் என்று சொல்லலாம், அரைகல்பத்திற்கு பக்தி ஆகும். அதைத் தான் இராவண இராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. 5 விகாரங்களின் இராஜ்யம் நடக்கிறது. காமச்சிதையில் அமர்ந்து பதீதமாக கருப்பாக ஆகிவிடுகின்றனர். இராவண சம்பிரதாயத்தினரின் நடத்தை மற்றும் தெய்வீக சம்பிரதாயத்தினரின் நடத்தையில் இரவு பகலுக்கான வித்தியாசம் உள்ளது. மனிதர்கள் தேவதைகளின் மகிமையைப் பாடுகின்றனர், தங்களை கீழ்தரமான பாவி என்று சொல்லிக் கொள்கின்றனர். பலவிதமான மனிதர்கள் உள்ளனர். நீங்கள் நிறைய பக்தி செய்துள்ளீர்கள். மறுபிறவி எடுத்து எடுத்து பக்தி செய்து வந்துள்ளீர்கள். முதலில் அவிபச்சாரி பக்தி, ஒருவரின் பக்தியில் ஆரம்பித்து பிறகு விபச்சாரி பக்தி (பலரை பக்தி செய்வது) ஆகிவிடுகிறது. கடைசியில் முற்றிலுமாக பலரை வழிபடுபவர்களாக ஆகிவிடுகின்றனர். அப்போது தந்தை வந்து ஒருவரை நினைவு செய்கின்ற ஞானம் கொடுக்கிறார். இந்த ஞானத்தின் மூலம் தான் சத்கதி ஏற்படுகிறது. இது தெரியாத வரையிலும் பக்தியின் பெருமையில் இருக்கின்றனர். ஞானக்கடலில் ஒரே ஒரு பரமாத்மா என்பது தெரியவில்லை. பக்தியில் எவ்வளவு வேத சாஸ்திரங்களை நினைவில் வைத்து சொற்பொழிவாற்றுகின்றனர். இது பக்தியின் விஸ்தாரம் ஆகும். பக்தியின் அழகு ஆகும். பாபா சொல்கிறார் – இது கானல் நீருக்கு சமமான அழகு. கானல் நீர் தூரத்திலிருந்து பார்க்கும்போது வெள்ளியைப் போல ஜொலிக்கிறது. மானுக்கு தாகம் எடுக்கும்போது அந்த கானல் நீரை நோக்கி ஓடி ஓடி மாட்டிக் கொள்கிறது. பக்தியும் அதுபோலத்தான். அனைவரும் அதில் மாட்டிக் கொண்டுள்ளனர். அவர்களை பக்தியிலிருந்து வெளியே எடுப்பதற்கு குழந்தைகளுக்கு உழைக்க வேண்டியுள்ளது.. இதில் தடைகள் கூட ஏற்படுகிறது. ஏனெனில் தந்தை தூய்மை ஆக்குகிறார். திரௌபதியும் அவரை கூப்பிட்டார். முழு உலகத்திலும் திரௌபதிகளும் துரியோதனர்களும் உள்ளனர். நீங்கள் அனைவரும் பார்வதிகள் அமரகதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும் சொல்லலாம் தந்தை உங்களுக்கு அமரலோகத்திற்கான அமரகதை சொல்கிறார். இது மரண லோகமாகும். இங்கே அகால மரணங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அமர்ந்த படியே மாரடைப்பு ஏற்பட்டுவிடுகிறது. நீங்கள் மருத்துவமனைக்கு சென்று புரியவைக்க முடியும். இங்கே உங்கள் ஆயுள் குறைவாக உள்ளது. நோய்வாய்படுகிறீர்கள். அங்கே சத்யுகத்தில் நோயே இருக்காது.

பகவானுடைய மகாவாக்கியம் –
தன்னைத் தான் ஆத்மா என்று புரிந்து தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். பிறரிடமிருந்து பற்றுதலை நீக்கிவிட்டால் உங்களுடைய விகர்மங்கள் வினாசமாகிவிடும். அதன்பிறகு ஒருபோதும் நோய்வாய்படமாட்டீர்கள். காலன் சாப்பிடமாட்டான். ஆயுளும் நீண்டதாக இருக்கும். இந்த தேவதைகளின் ஆயுள் நீண்டதாக இருந்ததல்லவா! பிறகு நீண்ட ஆயுளுடையவர்கள் எங்கே சென்றனர்? மறுபிறவி எடுத்து எடுத்து ஆயுள் குறைந்துவிடுகிறது. இது சுகம் துக்கத்திற்கான விளையாட்டாகும். இதை யாரும் தெரிந்திருக்கவில்லை. மேளா- திருவிழாக்கள் எவ்வளவு நடைபெறுகின்றன! கும்பமேளாவில் எவ்வளவு பேர் சென்று ஸ்நானம் செய்ய ஒன்றுகூடுகின்றனர். ஆனால் எந்த ஒரு பலனும் இல்லை. நீங்கள் தினமும் ஸ்நானம் செய்கிறீர்கள். கடருந்து தான் அனைத்து இடங்களுக்கும் தண்ணீர் வருகிறது. அனைத்தையும் விட நல்ல தண்ணீர் கிணற்றில் தான் கிடைக்கிறது. நதிகளில் குப்பைகள் இருக்கின்றன. கிணற்றின் தண்ணீர் இயற்கையாகவே சுத்தமாக இருக்கிறது. ஆகவே அதில் ஸ்நானம் செய்வது மிக நல்லதாகும். முதலில் இந்த பழக்கம் இருந்தது. இப்போது நதிகளுக்கு செல்லும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பக்தி மார்க்கத்திலும் கூட தூய்மையை விரும்புகின்றனர். எங்களை வந்து தூய்மையாக்குங்கள் என்று பரமாத்மாவை அழைக்கின்றனர். பரமாத்மா அழுக்கான ஆடைகளை சலவை செய்தார்... என்று குருநானக் கூட பரமாத்மாவின் மகிமைப் பாடியுள்ளார். தந்தை வந்து அழுக்கான ஆடைகளை தூய்மை யாக்குகிறார். இங்கே தந்தை ஆத்மாவை தூய்மைப் படுத்துகிறார். அவர்கள் ஆத்மாவில் எதுவும் ஒட்டாது என்று புரிந்துள்ளனர். இது இராவண இராஜ்யம் என்று தந்தை சொல்கிறார். சிருஷ்டியின் இறங்கும் கலை ஆகும். ஏறும் கலையில் அனைவருக்கும் நன்மை என்று பாடப்பட்டுள்ளது. அனைவரின் சத்கதி ஏற்பட்டுவிடுகிறது. ஹே பாபா! உங்களின் மூலம் அனைவருக்கும் நன்மை ஏற்பட்டுவிடுகிறது. சத்யுகத்தில் அனைவருக்கும் நன்மை ஏற்பட்டுவிடுகிறது. அங்கு அனைவரும் சாந்தியில் இருக்கின்றனர், ஒரே ஒரு இராஜ்யம் இருக்கிறது. அந்த நேரத்தில் மற்ற அனைவரும் சாந்திதாமத்தில் இருக்கின்றனர். இப்போது உலகத்தில் சாந்தி ஏற்பட வேண்டும் என்று தலையை உடைத்துக் கொள்கின்றனர். நீங்கள் இப்போது கேட்டுக்கொண்டிருக்கும் அமைதியானது உலகத்தில் முன்பு எப்போது இருந்தது,? என்று அவர்களிடம் கேளுங்கள். கலியுகத்தில் இன்னும் 40 ஆயிரம் வருடங்கள் உள்ளது என்று அவர்கள் சொல்கிறார்கள். மனிதர்கள் காரிருளில் இருக்கிறார்கள். 5 ஆயிரம் வருடங்களுடைய முழு கல்பம் எங்கே, ஒரே கலியுகத்திற்கு இன்னும் 40 ஆயிரம் வருடங்கள்

என்று சொல்வது எங்கே... பலதரப்பட்ட கருத்துகள் உள்ளன. பிறவிகளும் 84 தான் என்று தந்தை வந்து சத்தியத்தை புரியவைக்கிறார். இலட்சக்கணக்கான வருடங்கள் இருந்தால் மனிதர்கள் விலங்கு போன்றவைகளாக ஆக முடியும். ஆனால் அப்படி சட்டமே கிடையாது. 84 பிறவிகளும் மனிதப்பிறவியாகத் தான் எடுக்கின்றனர். அதன் கணக்கும் கூட தந்தை கூறுகிறார். குழந்தைகளாகிய நீங்கள் இந்த ஞானத்தை தாரணை செய்ய வேண்டும். ரிஷிகள் முனிகள் தெரியாது தெரியாது என்று சொல்சென்று விட்டனர். தெரியாது என்றால் நாத்திகராக ஆகிவிட்டனர். கண்டிப்பாக யாராவது ஆஸ்திகர்களாக இருக்க வேண்டும். தேவதைகள் ஆஸ்திகர்கள், இராவண இராஜ்யத்தில் நாத்திகர்களாக இருக்கின்றனர். ஞானத்தின் மூலம் நீங்கள் ஆஸ்திகராக ஆகின்றீர்கள். பிறகு 21 பிறவிகளுக்கான ஆஸ்தி கிடைக்கிறது. பிறகு ஞானத்தின் அவசியம் இருப்பதில்லை. இப்போது புருஷோத்தம சங்கமயுகம், நாம் உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்களாக சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆகிக்கொண்டிருக்கிறோம். இங்கே யார் எவ்வளவு படிப்பார்களோ, அவ்வளவு உயர்ந்த பதவி அடைவார்கள். படித்தார்கள் எழுதினார்கள் என்றால் உலகத்தின் எஜமானர்களாக ஆவார்கள், இல்லையானால் குறைந்த பதவி அடைவார்கள். ஆனால் அது சுகத்தின் இராஜ்யமாகும். இங்கே துக்கத்தின் இராஜ்யமாகும். ஆஸ்திகர் ஆனார்கள் என்றால் சுகத்தின் இராஜ்யம் செய்வார்கள். பிறகு இராவணன் வருவதால் நாஸ்திகர் ஆகிவிடுகின்றனர். ஆக துக்கம் ஏற்படுகிறது. பாரதம் அனைத்தும் நிறைந்ததாக இருந்த போது அளவற்ற செல்வம் இருந்தது. சோமநாத் கோயில் எவ்வளவு உயர்ந்ததாக கட்டப்பட்டிருந்தது? கோயில் கட்ட இவ்வளவு செல்வம் இருந்தது என்றால் அவர்கள் தங்களிடம் எவ்வளவு செல்வம் வைத்திருந்திருப்பார்கள்? இவ்வளவு செல்வமும் எங்கிருந்து கிடைத்தது? கடல் தட்டுகளை நிரப்பி நிரப்பி கொடுத்தது என்று சாஸ்திரங்களில் எழுதப்பட்டுள்ளது. இப்போது ஞானக்கடல் உங்களுக்கு இரத்தினங்களின் தட்டுகளை நிரப்பிக் கொடுக்கிறார். இப்போது உங்கள் பை நிரம்பிக் கொண்டிருக்கிறது. அவர்கள் சங்கர் முன்னால் சென்று சொல்கிறார்கள் – எங்களின் பையை நிரப்புங்கள் என்று. அவர்கள் தந்தையை தெரிந்து கொள்ளவில்லை. பாபா இப்போது நமது பையை நிரப்பிக் கொண்டிருக்கிறார் என்று நீங்கள் தெரிந்துள்ளீர்கள். யாருக்கு எவ்வளவு வேண்டுமோ நிரப்பிக் கொள்ளலாம். எவ்வளவு நன்றாக படிப்பார்களோ, அந்தளவு உதவித் தொகையும் (ஸ்காலர்ஷிப்) கிடைக்கும். விரும்பினால் உயர்ந்ததிலும் உயர்ந்த இரட்டை கிரீடதாரி ஆகுங்கள், இல்லையானால் ஏழை பிரஜை அல்லது தாச தாசியாக ஆகுங்கள். நிறைய பேர் விவாகரத்து கொடுத்துச் (பாபாவை விட்டுவிட்டு) சென்று விடுகிறார்கள். அது கூட நாடகத்தில் பதிவாகி உள்ளது. பாபா சொல்கிறார் - எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நானோ கவலைகளுக்கு அப்பாற்பட்டவன். உங்களையும் அப்படி ஆக்கிக் கொண்டிருக்கின்றேன். கவலைகளிலிருந்து நீக்கிய சுவாமி சத்குருவே ...... என்று பாடுகிறார்கள். அந்த சுவாமி அனைவருக்கும் தந்தையாவார். அவரை எஜமானர் என்றும் சொல்கிறார்கள். நான் உங்களுடைய எல்லைக்கப்பாற்பட்ட ஆசிரியராக இருக்கின்றேன் என்று பாபா சொல்கிறார். பக்தி மார்க்கத்தில் நீங்கள் பல ஆசிரியர்களிடமிருந்து பல கல்விகளைக் கற்கின்றீர்கள். பாபா உங்களுக்கு கற்றுக் கொடுக்கும் கல்வி அனைத்திலும் தனிப்பட்ட ஞானமாகும். அவர் ஞானக்கடல் ஆவார். அவரை அனைத்தும் அறிந்தவர் என்று சொல்லக்கூடாது. இப்படி நிறைய பேர் சொல்கிறார்கள் - நீங்களோ என் மனதில் இருப்பதை தெரிந்திருக்கிறீர்கள். பாபா சொல்கிறார் - எனக்கு எதுவும் தெரியாது நான் குழந்தைகளாகிய உங்களுக்கு படிப்பிக்க வந்துள்ளேன். ஆத்மாவாகிய நீங்கள் தன்னுடைய சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றீர்கள். நான்கூட இந்த சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளேன். ஆத்மா எவ்வளவு சிறிய புள்ளியாக இருக்கிறது என்பது யாருக்கும் தெரிவதே இல்லை. ஆக பாபா சொல்கிறார் – முதலில் ஆத்மாவைப் புரிந்து கொள்ளுங்கள். பிறகு தந்தையைப் புரிந்து கொள்வீர்கள். பாபா முதன் முதலில் ஆத்மாவுடைய ஞானத்தைப் புரிய வைக்கிறார். பிறகு தந்தையினுடைய அறிமுகத்தைக் கொடுக்கிறார். பக்தியில் சாலிக்கிராமத்தை உருவாக்கி பூஜை செய்து பிறகு அழித்து விடுகின்றனர். பாபா சொல்கிறார் - இவையனைத்தும் பொம்மைகளின் பூஜையாகும். யார் இந்த அனைத்து விசயங்களையும் நன்றாகப் புரிந்து கொள்கிறார்களோ அவர்கள் மற்றவர்களுக்கும் நன்மை செய்கின்றனர். பாபா நன்மை செய்பவர், ஆக குழந்தைகளும் அவர்போல் ஆக வேண்டும். சிலர் மற்றவர்களை சேற்றிலிருந்து வெளியேற்றி பிறகு தானே சென்று மாட்டி இறந்து போகிறார்கள். தூய்மையற்றவர்களாக ஆகி விடுகிறார்கள். ஈட்டிய வருமானத்தையும் இழந்து விடுகிறார்கள். ஆகையால் எச்சரிக்கையாக இருங்கள் என்று பாபா சொல்கிறார். காமச் சிதையில் அமர்ந்ததினால் தான் நீங்கள் கருப்பாக ஆகி விட்டீர்கள். நாம் தான் வெண்மையாக இருந்தோம். பிறகு நாம் தான் கருப்பாக ஆகி விட்டோம் என்று நீங்கள் சொல்வீர்கள். நாம் தான் தேவதையாக இருந்தோம். பிறகு நாம் தான் கீழே இறங்கினோம். இல்லையானால் 84 பிறவிகளை வேறு யார் எடுப்பார்கள்? இந்தக் கணக்கை பாபா புரிய வைக்கிறார். குழந்தைகளுக்கு நிறைய உழைக்க வேண்டியுள்ளது. அரை கல்பமாக விஷக்கடலில் விழுந்து

கிடந்தீர்கள். அதிலிருந்து வெளியேறுவது ஒன்றும் சித்தி வீடு அல்ல. சிறிதளவு ஞானத்தை யார் எடுத்தாலும் அது ஒன்றும் அழிந்து போவதில்லை. இது சத்திய நாராயணன் ஆவதற்கான கதையாகும். பிறகு பிரஜையாகவும் ஆகிறார்கள். கொஞ்சம் புரிந்து கொண்டு போய் விடுகிறார்கள். முடிந்தால் பிறகு வந்து புரிந்து கொள்ளலாம். போகப் போக மனிதர்களுக்குள் வைராக்கியம் கூட ஏற்படும். சுடுகாட்டில் வைராக்கியம் வருகிறது, வெளியே வந்ததும் அந்த வைராக்கியம் முடிந்து போய்விடுகிறது. நீங்கள் புரிய வைக்கும் போதும் கூட நல்லது, நல்லது என்று சொல்கிறார்கள். வெளியே போனதும் முடிந்து போகிறது. இந்த வேலையை முடித்து விட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். வெளியே சென்றதும் மாயை தலையை திருப்பி விடுகிறது. கோடியில் சிலர் வெளிப்படுகிறார்கள். இராஜ்ய பதவி அடைவதில் உழைப்பு தேவைப் படுகிறது. ஒவ்வொருவரும் தன் மனதிடம் கேட்க வேண்டும் - எல்லைக்கப்பாற்பட்ட தந்தையை நாம் எந்தளவு நினைவு செய்கிறோம்? தந்தையின் நினைவு மறந்து போகிறது என்று சொல்கிறார்கள். அட, அஞ்ஞான காலத்தில் எப்போதாவது எனக்கு தந்தையின் நினைவு மறந்து போகிறது என்று சொல்வீர்களா என்ன!

பாபா சொல்கிறார் - எவ்வளவுதான் புயல் வந்தாலும் நீங்கள் அசையக் கூடாது. புயல் வரும், ஆனால் கர்மேந்திரியங்களால் மட்டும் எந்தத் தவறும் செய்யக்கூடாது. மாயை மந்திரம் போட்டு விட்டது என்று சொல்கிறார்கள். பாபா சொல்கிறார் - இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! நினைவு செய்தீர்கள் என்றால் துரு நீங்கி விடும். ஆத்மாவின் மீது துரு ஏறுகிறது. அது நினைவின் மூலம் நீங்கி விடும். தந்தை கூட புள்ளியாக இருக்கிறார். தந்தையின் நினைவைத் தவிர துரு நீங்குவதற்கு வேறு எந்த வழியும் கிடையாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாராம்சம்:

1. நாம் நன்மை செய்யக்கூடிய (கல்யாணகாரி) தந்தையின் குழந்தைகள், ஆகையால் தனக்கும் அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும். வருமானம் இல்லாமல் போய் விடும்படியான அப்படிப்பட்ட எந்த தீய காரியமும் செய்யக்கூடாது. இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

2. படிப்பை நன்றாகப் படித்து ஞான ரத்தினங்களால் தனது பையை நிரப்பிக் கொள்ள வேண்டும். உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) வாங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தந்தைக்கு நிகராக கவலையிலிருந்து விடுபட்டவராக ஆக வேண்டும்.

வரதான்:

பிராமண ஜென்மத்தின் விசேஷத் தன்மையை இயற்கையான இயல்பாக மாற்றக்கூடிய சகஜ முயற்சியாளர் ஆகுக.

பிராமண ஜென்மம் கூட விசேஷமானது, பிராமண தர்மம் மற்றும் காரியம் கூட விசேஷமானது அதாவது அனைத்தையும் விட உயர்ந்தது, ஏனெனில் பிராமணர்களோ கர்மத்தில் சாகார பிரம்மா பாபாவை பின்பற்றுகிறார்கள். அதனால் பிராமணர்களின் குணம் தான் விசேஷ குணமாக இருக்கிறது. சாதாரண அல்லது மாயாவியான குணம் பிராமணர்களின் குணம் அல்ல. நான் விசேஷ ஆத்மா என்ற இந்த நினைவு சொரூபத்தில் மட்டும் இருங்கள். எப்பொழுது இந்த குணம் இயல்பாகி விடுகிறதோ அப்பொழுது தந்தைக்கு சமமாக ஆவதை எளிதாக அனுபவம் செய்வீர்கள். நினைவு சொரூபத்தின் மூலம் சக்திசாலி சொரூபம் ஆகி விடலாம்.

சுலோகன்:

தூய்மை மற்றும் அமைதியின் ஒளி நாலா பக்கமும் பரப்ப கூடியவர் தான் லைடிட் ஹவுஸ் (கலங்கரை விளக்கு).